உதகை நகர திமுக சார்பில் உதகை நகர கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை – ஏற்பாட்டிலும் கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு உதகை லவ்டேல் புனித அந்தோனியார் உயர்நிலை பள்ளியில் உள்ள ஏழை எளிய 150 மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளான புத்தகப் பை, பிளாஸ்க், ஹாட் கேஸ் போன்ற பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஆர்.பி. பரமேஷ் குமார், மாவட்ட துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.நாசர் அலி, நகரத் துணைச் செயலாளர் கார்டன் கிருஷ்ணன், நகர அவைத் தலைவர் ஜெய கோபி, தலைவர் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மற்றும் தலைமை ஆசிரியை, பள்ளி ஆசிரியர்கள், பள்ளி குழந்தைகள் கலந்து கொண்டனர்

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில புதிய எருமைவெட்டி பாளையம் ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கழக கொடியேற்றி மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை வழக்கறிஞும் கிளை செயலாளருமான ஜெ. ராம்ஜி, வெங்கடேசன் ஆகியோர் சிறப்பாக செய்தனர்.

சோழிங்கநல்லூர் தொகுதியில்

வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும்!

பேரவையில் – ச.அரவிந்த் ரமேஷ் கோரிக்கை!

சென்னை, மார்ச் 21-

சோழிங்கநல்லூர் தொகுதியில உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து விவாதம் வருமாறு :

ச. அரவிந்த் ரமேஷ்: சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகமானது தினந்தோறும் அதிகப்படியான மக்கள் வந்து செல்கின்ற ஒரு அலுவலகமாக இருக்கிறது. இந்த வட்டாட்சியர் அலுவலகமானது இது வரையில் தனியார் கட்டடத்தில்தான் தற்காலிகமாக இயங்கி வருகிற ஒரு சூழ்நிலை. ஆகவே, இந்த வட்டாட்சியர் அலுவலகம் சோழிங்கநல்லூர் மற்றும் அதனை சுற்றி இருக்கின்ற கிராமங்கள் உத்தண்டியாக இருக்கட்டும், ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, பாலவாக்கம், கொட்டிவாக்கம், துரைப்பாக்கம், செம்மஞ்சேரி, சோழிங்கநல்லூர் போன்ற அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற ஊர்களான மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, தில்லடம் பேட்டை போன்ற ஊராட்சிகளெல்லாம் பேரூராட்சியாக மாற்றப்பட்டு, பேரூராட்சிகளெல்லாம் நகராட்சியாக மாற்றப்பட்டு இன்றைக்கு மாநகராட்சியாக இருக்கிறது. ஆகவே, இந்த பகுதிகளிலிருந்து அதிகப்படியானமக்கள்தினந்தோறும் வந்து செல்கின்ற சான்றிதழ்களாக இருக்கட்டும், பட்டா மாற்றங்களாக இருக்கட்டும், ஆகவே, இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு, அலுவலர்களுக்கு பணி சுமை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து பொதுமக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட இந்தப் பகுதியும் சென்னைக்குட்பட்ட *belt area* என்ற பகுதிகளுக்கெல்லாம் நீண்ட நெடுநாட்களான கோரிக்கையை நிறைவேற்றி, *belt area*-க்களில் எல்லாம் பட்டாக்களை வழங்கி இன்றைக்கு அரசாணை வெளியிட்டிருப்பது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அலுவல் பெருமக்களுக்கும், குறிப்பாக அந்த துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் நான், என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு குளறுபடி இருந்துகொண்டிருக்கிறது. 2006-2011-ல் தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர், முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் எப்படி பட்டாக்கள் வழங்கினார்களோ அதேபோல் பட்டாக்களை வழங்கி அந்த மக்களுடைய நீண்ட நெடுநாள் கனவுகளை நிறைவேற்றித் தருகின்ற அரசாக நம்முடைய தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய அரசு இருந்துகொண்டிருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டு, விடைபெறுகிறேன்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்: எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரே கேள்விதான். அமைச்சராக நானும் ஒரே பதில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எல்லோரும் அவர்களுடைய பகுதியிலே தாலுகாக்களை பிரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இதையெல்லாம் கடிதமாக என்னிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கை எடுப்போம். தாலுகாக்களை பிரிக்க வேண்டிய அவசியம் இருப்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. நிதிநிலைக்கேற்றாற்போல் நிச்சயமாக செய்து கொடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

க.கோவிந்தராஜ் தலைமை! இரா.செந்தில்குமார் முன்னிலை!

51வது வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் மற்றும் நிதி நிலை அறிக்கை பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் - நலஉதவிகள்!

இந்திரகுமார் சிறப்புரை! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி - அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.21

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை பட்ஜெட் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (21.03.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஸ்ரீரங்கம்மாள் கோயில் தெரு, ஜெ.பி. கோயில் தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார். பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், எஸ். குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி. ஜெயலட்சுமி, லோ. மோகன், க.கலைச்செல்வன், ஜி.சதிஷ்குமார், ஆர். வி.கணேஷ், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், என். பாரி, ஐசிஎப்.பழனிவேல், எஸ்.சுரேஷ், வி.குமார், அத்தோ பி.முனுசாமி, எம். என்.வெங்கட், கே.லட்சுமணன், எல்.சீனிவாசன்,

எம்.எம்.சந்தரு, கே. ஆறுமுகம், கே.சசி, டி.கவியரசு, வி.சரவணன், டி.நந்தகுமார், கே.குபேரன், எம்.வல்வராஜ், எஸ்.மாரியப்பன், ஜி.அருண்குமார், ஆர்.ராஜ்குமார், எம்.சண்முகம், ஆகியோர் வரவேற்கின்றனர்.

க.சுரேஷ், இரா.முருகன், த.ரவி, எஸ்.மாரிமுத்து, க.சேகரன், இ. மூர்த்தி, எம்.இ.சாகுல்ஹமீத், கே.கோபால், ஜி.சம்பத், ஜி.வேலு, ஏ.மாணிக்கம், ஜி.பாபு, ஜி.கோபு, தட்சணாமூர்த்தி, தனசேகர், ஆர்.கண்ணையன், பி.ஏழுமலை, கே.பாலாஜி, டி.பெருமாள், எம்.மாசிலாமணி, எஸ்.சந்தோஷ்முருகன், எச்.பழனிராஜ், ஏ. சந்திரசேகர், வி. செல்லபாண்டியன், எஸ்.அரவிந்த், எஸ்.ஜேம்ஸ், ஏ.ரகு, ஜி.பைரோஸ்கான், என். சூர்யா, ஹேமலதா, பி. தீபா, கெ.ஜெய்சங்கர், ஆர்.சண்முகம், எஸ்.பார்த்தசாரதி, பி.கார்த்தி, டி. கண்ணன், வி.சிவக்குமார், ஜி. அன்பழகன், ஜி.கங்காதரன், எஸ்.மணி, என். சதிஷ், ஆர்.நரேஷ், தக்காளி.பாண்டி, பாலகிருஷ்ணன், தாண்டவராயன்,

இக்கூட்டத்தில் ஊடக வியாளர் இந்திரகுமார் சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ, அ.சுபேர்கான், ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இரா.மதிவாணன், தா.இளையஅருணா, ந.மனோகரன், பி.டி. பாண்டிசெல்வம், ஆர். வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வண்ணை புகாரி, வே.சிவகுமார், பி. ராஜேந்திரன், ந. சண்முகம், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மா, இ.மதன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், எல்.பாலலட்சுமி, ஜெ.கௌரீஷ்வரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜி.உமாபதி, பி.எஸ். நாராயணன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

படப்பை ஆ. மனோகரன் தலைமை! அமைச்சர் தா.மோ. அன்பரசன்- டி.ஆர். பாலு எம்.பி. துவக்கி வைக்கின்றனர்!

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் இளைஞரணி- மாணவரணி நிர்வாகிகள் பாசறைக் கூட்டம்!

முனைவர் இரா.தி.சபாபதி மோகன் - வழக்கறிஞர் இரா. ராஜீவ்காந்தி - சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச் 21-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் திமுக மற்றும் இளைஞர் அணி-மாணவர் அணி இணைந்து நடத்தும் இளைஞர் அணி-மாணவர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சி பாசறை கூட்டம் 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் சிக்கராயபுரம், கார்த்திக் பேலஸில், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை.ஆ. மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

ப. அறிவொளி, அ. ஐமீர் வரவேற்புரை ஆற்றிட, ரா.தீபக், மா.சே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, பொன். இளைய பாரதி, லோ.சுதாகர், இரா.குமரவேல், சே. பார்த்திபன், ஆர். சையத்ர மிஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பயிற்சி பாசறை கூட்டத்தில், "திராவிடத்தை வளர்த்திட்ட தந்தை பெரியாரும்- பேரறிஞர் அண்ணாவும்.." என்கின்ற தலைப்பில் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், ,"சமூகப் புரட்சி மற்றும் தமிழ்நாட்டிலன் வளர்ச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரும்.. திராவிட மாடல் முதல்வரும்.. என்கின்ற தலைப்பில் வழக்கறிஞர் இரா. ராஜீவ்காந்தி, "வருங்கால தலைமுறைக்கு வழிகாட்டும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்" என்கின்ற தலைப்பில், சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

குறு- சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சி (வ) மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆகியோர் பயிற்சி பாசறை கூட்டத்தினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கூட்டத்தில் பிரபு கஜேந்திரன், கோல்டு.டி.பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, மீஞ்சூர்.கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன் , குன்றத்தூர் (வ) ஒன்றிய கழகச் செயலாளர் ஏ. வந்தேமாதரம், உமா மகேஸ்வரி வந்தேமாதரம்,

ப. ராமமூர்த்தி,வீ. விஜயகுமார், டி.கே. கமலக்கண்ணன், கோ.ஜானகி ராமன், கே.மணிகண்டன், சங்கீதா வேலு, கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஸ்வரன் எஸ்.ஜெகதீப், தே. ஜெகன் தேவேந்திரன் ஒன்றிய கழக நிர்வாகிகள், மு. சுப்பிர மணி, வ. நந்தகோபால், ஏ.மணி, வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, வி.அரி, மூ. ராஜேந்திரன், மா. பரிமேலழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட கிளைக் கழக இளைஞரணி நிர்வாகிகள், கிளைக் கழக மாணவரணி நிர்வாகிகள், பூத் அளவில் நியமிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மா.வைத்தீஸ்வரன், இ.பாலாஜி ஆகியோர் நன்றி கூறுகிறார்.

பையனூர் எம்.சேகர் தலைமை! ஜிக்கி விநாயகம் வரவேற்புரை!

திருப்போரூர் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ - தமிழன் பிரசன்னா - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஸ்ரீலேகா சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச். 21 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.03.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு, திருப்போரூர், வெங்கூர் கூட்ரோடு, சிறுங்குன்றத்தில் நடைபெறுகிறது.

திருப்போரூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பையனூர் எம்.சேகர் தலைமை வகிக்கிறார்.

சிறுங்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவர் ஜிக்கி விநாயகம் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இ.திருமலை, டி.ஜெயச்சந்திரன், கல்யாணி ராமகிருஷ்ணன், ஆர்.சுப்பிரமணி, ஓ.ஜெ.மதுரவேல், கோ.கஜபதி, வே.பொன்னுரங்கம், எஸ்.சண்முகம், நிர்மல் குமார், வி.வீரராகவன், எஸ்.ராமு, எஸ்.ஏழுமலை, டி.விநாயகம், ஏ.பாபு, ஆர். கோவிந்தன், சி.நாகலிங்கம், எம்.தேவராஜ், எஸ்.ரோகித் குமார், வி.கார்த்திபன், வி. கோவிந்தசாமி, கே.சேகர், ஜி. தம்பிரான், ஏ.ராஜேந்திரன், இ.ஸ்ரீவித்யா ஏழுமலை, கே.மன்னார், இ.பன்னீர்செல்வம், எஸ்.பழனி, பி.நளினி, வி.வீரராகவன், எம்.சங்கீதா முருகன், ஆர். ராஜேந்திரன், வி.ரவி, வி.முருகன், வி.ரேணுகா வேதகிரி, ஆர்.தமிழ்செல்வன், ஜி.சிவக்குமார், வி.சங்கர், எஸ்.சங்கீதா சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக இளம் பேச்சாளர் ஸ்ரீலேகா ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், வெ.விஸ்வநாதன், வீ.தமிழ்மணி, எஸ். ஆர்.எல்.இதயவர்மன், பிரபு கஜேந்திரன், ஆர்.டி.அரசு, சி.தசரதன், ஜி.சி.அன்புசெழியன், சத்யா சேகர், எம். தேவராஜ், டி.யுவராஜ், டி. பிரகாஷ், எஸ்.ஏ.பச்சையப்பன், வீ.விஜயகுமார், வி. அருள் மணி, ஆர்.பரசுராமன், ச.சசிகலா, ஆர்.கோவிந்து, ஆர்.யாதவன், எம்.சி.ராகவன், கே.ரவிக்குமார், செ. எல்லப்பன், சி.பஞ்சாமிர்தம், கே.எஸ்.தனபால், எஸ்.சுரேஷ், கண்.கௌரிசங்கர், ஆ.பரந்தா மன், டி. எஸ்.பாலு, வி.மோகன்குமார், ச.அ.ரவிக் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.பழனிவேல் நன்றி கூறுகிறார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட

வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தாயார் ஜெ.ஜோதி மறைவு!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – கழக முன்னணியினர் அஞ்சலி!

திருவள்ளூர் மார்ச் 21-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தாயார் ஜெ.ஜோதி வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் தகவல் அறிந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்

இதில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, எம்.கே. மோகன், ஜோசப் சாமுவேல், ஐ.பரந்தாமன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி,

தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் க. பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் உரிமை பிரிவு இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாநில விளையாட்டின் துணைச் செயலாளர் பி.கே.பாபு, மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், எஸ்.சங்கர், மற்றும் திருவேற்காடு நகரக் கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் வார்டு கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் குடும்பத்தினர்கள் நண்பர்கள் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆலோசனை படி அய்யனேரி ஊராட்சியில் கழகக் கொடியேற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.பழனி வழங்கினார். உடன் சங்கரன், ஏ.கே.திருவேங்கடம், சி.எம். ரவி, சுகுணாமூர்த்தி, வெங்கடேசன், டில்லிபாபு, கார்த்திக், வேணு, நீலமேகம், ராமன், கிருஷ்ணன், ரமேஷ், கோபிநாத், ஆறுமுகம், வினோத், உள்பட பலர் உள்ளனர்.

முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு ஒன்றிய சேலை ஊராட்சி திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் காக்களூர் ஆர்.ஜெயசீலன் கழகக் கொடியேற்றி தூய்மை பணியாளர்களுக்கு புடவை பாதுகாப்பு உடை உபகரணங்கள் அறுசுவை உணவு வழங்கினார். உடன் நிர்வாகிகள் எஸ்.சௌந்தரராஜன், முரளி, சுப்பிரமணி, தட்சிணா மூர்த்தி, தினகரன், வில்சன், மோகன், காணிக்கை ராஜ், விஜயகுமார், ராமலிங்கம், ஜான, சிவபிரகாசம், உள்பட கிளை கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்